மகாமகோபாத்தியாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

சிவமயம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

பலவான்குடி

# "சிவநேசன்"

## ஏழாம் ஆண்டுத் தொகுதி.

ஸ்ரீமுக ஆவணி முதல்
பவ ஆடி வரை

பலவான்குடி
"சிவநேசன்" அச்சியந்திரசாலையில்,
பத்திராதிபர் ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால்
அச்சியற்றி வெளியிடப் பெற்றது.

1934

சென்னைப் பதிவு எண் 2302

சிவமயம்

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# "சிவநேசன்"

## ஏழாவதாண்டின் உள்ளுறை.


| கட்டுரையின் பெயர். | எழுதிய திருவாளர்கள் | பக்கம் |
|---|---|---|
| அகத்திய முனிவரைப்பற்றிய ஆராய்ச்சி | கா. சுப்பிரமணிய பிள்ளை M. A. M. L. | 290 |
| அந்தம் ஆதி | தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் | 80 |
| அப்பைய தீக்ஷிதர் மகிமை | நல். கண்ணப்ப முதலியார் | 53 |
| அமங்கிலிகள் | க. ராஜமாணிக்கப் பிள்ளை | 121 |
| அரசன் ஆணை | நல். கண்ணப்ப முதலியார் | 24 |
| ஹரதத்தர் மகிமை | ,, | 85 |
| அவனன்றி ஓரணுவும் அசையாது | ,, | 117 |
| ஆலயவழிபாடு | நாகாசல ஆலயநேசன் | 19 |
| இந்துமதக் கொள்கைகளும் சுகாதாரங்களும் | அ. முத்தைய பிள்ளை | 125, 226 |
| இப்படிக் கிடப்பவள் எப்படிப் பெறுவாள்? | மெ. குப்புசாமி பிள்ளை | 119 |
| இரங்கற்பாக்கள் | வயி. நாக. ராம. அ. இராமநாதச் செட்டியார் | 43 |
| இறைவனருளியஇருபெருநூல்கள் | பத்திராசிரியர் | 189 |
| உபமன்னியு முனிவர் | ச. குமாரஸ்வாமிக் குருக்கள் | 105 |
| உலகிற் சிறந்தது எது? | இ. கோவிந்தசாமி பிள்ளை | 193, 217 |
| உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் | சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார் | 122 |
| எடுத்துக்காட்டின் இயல்பு | தெய்வசிகாமணி | 233 |
| ஏகாதசி விரதம் சைவர்களுக்கும் உரியதே | வை. ச இராமலிங்கமுதலியார் | 203 |
| எற்றமுறும் வழிகள் | பத்திராதிபர் | 41 |
| 'ஐயர்' என்னும் சொல்வழக்கு | ஒரு மாணாக்கன் | 156 |
| ஐய வினா | சித்தாந்தங் கற்போன் | ,, |
| ஐயோ! பாவம்! | க. ராஜமாணிக்கப் பிள்ளை | 107 |
| ஓர் வினா | லோ. கு. நடராஜசெட்டி | 34 |

| | | |
|---|---|---|
| கங்கை நீரின் தூய்மை | ... டாக்டர் நெல்சன் | 263 |
| கடவுளும் காந்தியும் | ... ஒரு சைவன் | 160 |
| கடை எழு வள்ளல்கள் | ... சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார் | 102 |
| கணபதியல்லதோர் கருமமில்லையே | ... அ. முத்தையபிள்ளை | 223 |
| கரும சண்டாளர் | ... உண்மைச் சைவன் | 178 |
| கற்பக விருக்ஷம் | ... 'ஞானசித்தி' | 266 |
| கனவு மெய்யே | ... நல். கண்ணப்ப முதலியார் | 152 |
| காந்திக்குச் சம்பந்தம் உண்டா? | ... குடந்தை காந்தி பஹிஷ்காரக் கமிட்டியார் | 170 |
| காந்திக்குப் பணம் எதற்கு? | ... ,, | 167 |
| காந்தியும் கணக்கப்பிள்ளையும் | ... 'பாரதமித்திரன்' | 183 |
| காந்தியின் கபடநாடகத் தன்மை | ... ,, | 185 |
| காந்தியே! ஏமாறவேண்டாம் | ... குடந்தை 'காந்திபஹிஷ்காரக் கமிட்டியார் | 172 |
| கிருஷ்ண பலராமர் எவற்றின் அவதாரங்கள்? | தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் | 96 |
| கிருஷ்ணார்ச்சுனரது கயிலாசயாத்திரை | ,, | 76 |
| கேதார விரதம் | ... வே. நாராயண கனபாடிகள் | 32 |
| கொலையுமா தெய்வவணக்கம்? | ... க. ராஜம்மாணிக்கப் பிள்ளை | 87 |
| சகல சாஸ்திர சம்மதம் | ... பத்திராசிரியர் | 241 |
| சண்டேசுவரர்வேறு; சண்டேசுவர நாயனார் வேறு | பொ. முத்தைய பிள்ளை | 104 |
| ஜப்பான்தேசத்துப் பத்து அறவுரைகள் | பத்திரிகைச்செய்வு | 232 |
| சரித்திரபுராணங்கள் | ... க. ராஜமாணிக்கப் பிள்ளை | 45 |
| சற்குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை | "சித்தாந்தம்" | 255 |
| சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் வினவுக்கு விடை | சிவசூரியநாராயணபிள்ளை | 206 |
| சிவகங்கை வர்ணாச்சிரம சுயராச்சிய சங்கம் | எம். ஜி. குருசாமி ஐயர் | 249 |
| சிவஞான சுவாமிகள் திருவுள்ளம் | ... பொ. முத்தைய பிள்ளை | 179 |
| சிவத்தியானத்திலுள்ள துவாத்திரிம்சத்(32)இலட்சணங்கள் | ச. பொன்னுசாமிக்குருக்கள் | 247 |
| சிவத்தினியல்பு | ... ,, | 13, 35, 64 |

| | | |
|---|---|---|
| "சிவநேசன்" அறிவிப்பு | ... அமைச்சர் | 20 |
| " | ... பத்திராதிபர் | 160 |
| சிவநேசனுக்கு மூலதனம் உதவிய திருவாளர்கள் | " | 211 |
| சிவநேசனுக்கு வாழ்த்தும்மதிப்புரையும் | | 14, 112, 116, 160, 211, 272 |
| சிவபஞ்சாக்கரம் ஜெபித்தலின் பலன் | அ. முத்தைய பிள்ளை | 60 |
| சிவபராக்ரமம் | ... தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் | 286 |
| சிவபெருமான்எண்குணமுடையவர் | .. ச. குமாரஸ்வாமிக் குருக்கள் | 29 |
| சிவபெருமான் குணநிதர் | ... " | 134 |
| சிவபேதங்களும் பதிபேதங்களும் | ... " | 151 |
| சிவமகத்வம் | ... தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் | 93 |
| சிவம்கிமை | ... " | 74 |
| சிவவழிபாடு | ... ச. பொன்னுசாமிக்குருக்கள், | 68, 108 |
| சிவலிங்க மகத்துவம். | ... தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் | 245 |
| சிவோத்கர்ஷம் | ... " | 48, 154 |
| சிவோபாசனே | ... " | 165 |
| சீதையின் வரலாறு | ... நல். கண்ணப்ப முதலியார் | 136 |
| சுக்கிரன் சிவபூசை செய்த வரலாறு | ... திருமயிலை செங்குந்த வாலிபர் சங்கத்தார் | 33 |
| சுமித்திர சண்டேசுவரர் | ... ச. குமாரஸ்வாமிக் குருக்கள் | 92 |
| சுவாமிநாத பண்டிதரவர்கள் மீது சாமகவி | பொ. முத்தைய பிள்ளை | 179 |
| செட்டியார்களின் செல்வாக்கு | ... பத்திராதிபர் | 273 |
| செந்தமிழ்ச்சைவத்திருத்தொண்டர் | ... " | 159 |
| செவிலி கூர்தொடு விளுயது | ... சித. நாராயணசாமிசுவாமி | 173 |
| சென்னை மாகாணத் தமிழர் மாநாடு | ... பத்திராசிரியர் | 164 |
| சைவச் சுமங்கலைகளும் தெய்வத் திருநீறும் | க. ராஜமாணிக்கப்பிள்ளை | 73 |
| சைவசமய உண்மைகள் | ... பத்திரிகைக் கொய்வு | 288 |
| சைவத்திருமுறையும் அதனை ஓதுந் தன்மையும் | அ. முத்தைய பிள்ளை | 199 |
| சோமவார விரதம் | ... " | 81 |
| சோழன் கரிகாலன் | ... ச. குமாரஸ்வாமிக் குருக்கள் | 120 |
| தமிழ்க் கல்வி | ... உ. வே. சாமிநாதையர் | 7 |
| தமிழ் நூல்களின் தகைமை | ... பத்திராசிரியர் | 161 |

தமிழ்மொழியின் தனிமைத்தன்மை ... ,, 166
தமிழன்பர் மகாநாட்டின் முடிவு ... ,, 113
தமிழன்பர் மகாநாடு ... ,, 65
ஷை ஷை விரிவுரைகள் ... சேதுசமஸ்தானம் கனம் ராஜா ஷண்முக ராஜேஸ்வர சேதுபதியவர்கள் & ஆனரபிள்டாக்டர் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் 128
ஷை ஷை ஷை ... மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் 145
தலைமைப் பேருரை ... ,, 250
தன்சரிதம்உணர்த்தும் தம்பிரான் றோழர் } ச. தண்டபாணிதேசிகர் 277
தாயிற்சிறந்த தயாவான தத்துவன் ... அ. முத்தையபிள்ளை 259
தாலி ... க. ராஜமாணிக்கப் பிள்ளை 101
தாலியறுத்த கலியாணம் ... ,, 106
திருக்கடைக் காப்பு ... நல். கண்ணப்ப முதலியார் 6
திருக்கோயிலதிகாரிகள் ... அர்த்தநாரீஸ்வரக் குருக்கள் 4
திருவாதிரைத் திருநாள் மகிமை ... நல். கண்ணப்பமுதலியார் 97
திருச்சக்கரப்பள்ளிசிவாலயநிலைமை. . எ. ஐராவதம் பிள்ளை 264
தில்லைத்திருவாயிரம்: திருப்புகழ் ... ஸ்ரீமத் தண்டபாணிசுவாமிகள் 296
தீர்மானங்கள் ... பத்திரிகைக் கொய்வு 181
தெய்வச்செந்தமிழிலும் திருத்தமா? ... பத்திராசிரியர் 137
தையல் சொற் கேளேல் ... அ. க. பொன்னுசாமி முதலியார் 59
நன்கொடை ... பத்திராதிபர் 244
நாட்டுக்கோட்டை நகரத்தாரவர்களுக்கு ஓர் வேண்டுகோள் } வயி. நாக. ராம. அ. இராமநாதன் செட்டியார் 230
நாடாளரசரின்நாட்டுமொழிப்பற்று ... பத்திரிகைக் கொய்வு 92
நாணற் புல்லின் நன்மை ... டி. வி. தர்மராஜ கனபாடிகள் 268
நூல்கள் வரவு ... பத்திராசிரியர் 244
நூல்கள் வெளியீடு ... ,, 3
பத்தினிக் கடவுள் ... சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார் 9, 25, 69
பலவான்குடி மணிவாசகசங்கத்திருவிழா } பத்திராதிபர் 36
பாண்டித்துரை ... சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார் 157
பாலை நெய்தல் பாடியது ... பத்திராசிரியர் 213

| | | |
|---|---|---|
| பிரதோஷ புண்ணியகாலம் | ... 'இந்து சாதனம்' | 248 |
| புலவர் புகழ் | ... உ. வே. சாமிநாதையர் | 254 |
| பொங்கற் பண்டிகை | ... அ. முத்தைய பிள்ளை | 109 |
| பொருட்டனைப் போற்றிவாழ் | ... பத்திராதிபர் | 1 |
| பொன்னேரிச் சந்திப்பு விழா | ... தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்கார் | 56 |
| மகாசிவராத்திரி | ... சாம்பமூர்த்தி சிவாசாரியார் | 158 |
| மங்கையர்க்கரசியார் அன்பின் மாண்பு | ... வை. ச. இராமலிங்கமுதலியார் | 197 |
| மதிப்புரை மஞ்சரி | ... பத்திராசிரியர் | 3, 40, 110, 186, 238, 270, 297 |
| முக்கிய வினு | ... ஒரு அன்பர் | 202 |
| முட்டை | ... மெ. குப்புசாமி பிள்ளை | 96 |
| முதற்கடவுள் முக்கண்ணனே | ... சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார் | 207 |
| யதார்த்தவாதி வெகுஜனவிரோதி | ... பத்திரிகைக் கொய்வு | 294 |
| ருத்ரர் ஏன் மயானத்தில்வசிக்கிறார்? | ... தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் | 79 |
| ருத்ரன் தாமஸ தேவதையா? | ... ,, | 21 |
| வாழ்நாள் வழியடைத்தல் | ... வ. மு. இரத்திநேசுவரையர் | 8 |
| விஷபானம் | ... தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் | 287 |
| விடுதல் பற்றுதல் | ... பத்திராதிபர் | 17 |
| விடை | ... தி. ஏ. சதாசிவம் | 92 |
| விநய விண்ணப்பம் | ... பத்திராதிபர் | 89 |
| வினு | ... விடை விரும்பி | 135 |


☞ மறைத் திருவாளர் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்ட்டர்: உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூதனமாக எழுதிய குறிப்புரை ஆராய்ச்சிக்குறிப்பு முதலியவற்றுடன் வெளியிட்டுவந்த "திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா" என்னும் நூலும், திருநெல்வேலிப்பேட்டை சைவத்திருவாளர் ஆ. ஈசுரமூர்த்தி பிள்ளை அவர்கள் பதவுரை கருத்துரைகள் எழுதி வெளியிட்டுவந்த "இருபா இருபஃது" என்னும் சைவ சித்தாந்த சாஸ்திரமும் இவ்வாண்டில் முடிவுற்றன.

"பழமலைக்கோவை" என்னும் பழமையான நூல் ஷை ஐயரவர்களின் குறிப்புரை முதலியவற்றுடன் 72 பக்கங்கள் (9 பாரங்கள்) வெளிவந்துள்ளன.

## சிவநேசனுக்கு வாழ்த்தும் மதிப்புரையும்

# வரைந்தனுப்பிய திருவாளர்கள்.

1. சி. மு. சின்னத்தம்பிப் பிள்ளை, வண்கிழக்கு, யாழ்ப்பாணம்.
2. கே. பி.. சுப்பிரமணிய சிவாசாரியார், கொ. இலக்குமிபுரம்.
3. வ. மு. இரத்தினேசுவரையர், ஆசிரியர், விவேகானந்தர் கல்விக்கழகம், ஆவினிப்பட்டி.
4. சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார், கோநகர்.
5. வை. ச. இராமலிங்கமுதலியார், தென்னாற்காடு ஜில்லா எஜிகேஷன் கௌன்ஸில்மெம்பர் & திருக்கோவலூர் தாலூகா போர்டு மெம்பர், கண்டாச்சிபுரம்.
6. லோ. கு. நடராஜ செட்டியார், மண்டி, வேலூர்.
7. ஆனந்த கானசபையார், கரிசூழ்ந்தமங்கலம்.
8. கா. மு. கிருஷ்ணசுவாமிக் குருக்கள், வைத்தீஸ்வரன்கோவில்.
9. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், சிதம்பரம்.
10. அ. க. பொன்னுசாமி முதலியார், சைவபுராணிகர், ஐயங்கார்குளம், காஞ்சீபுரம்.
11. எ. முத்தைய பிள்ளை, கண்டாச்சிபுரம் (தென்னாற்காடு ஜில்லா)
12. ச. குமாரசுவாமிக் குருக்கள், அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
13. ப. ராம. சுப. சுப்பிரமணியன் செட்டியார், தென்னூர் (திருச்சிராப்பள்ளி)
14. தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்கார், சிவபரத்துவ நிரூபணசிகாமணி, பொன்னேரி.
15. மு. முத்துப்பிள்ளை, வித்துவான், பரிமணங்குடி.
16. தி. மு. செந்திநாயகம் பிள்ளை, கௌமாரமடாலயம், திருவாமாத்தூர்.
17. எஸ். சந்தான கோபாலையர், தலைமையாசிரியர், போர்டுஇந்து உயர்தர ஆண்பாடசாலை, கண்டாச்சிபுரம்.
18. சிவசூரிய நாராயணபிள்ளை, பஞ்சாங்ககணிதர், இட்டமொழி, திருநெல்வேலி.
19. சபாபதி சுப்பிரமணியன், காரியதரிசி, தெய்வீகன் இலவச வாசகசாலை, ஆண்டான் கோவில்.
20. ராம. உ. ராம. இராமசாமி செட்டியார், காரைக்குடி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

| ஆண்டு எ | பலவான்குடி—ஸ்ரீமுக—ஆவணி | திங்கள் க |
|---|---|---|

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## பொருடனைப் போற்றிவாழ்.

இது, நமதுஅருள்மூதாட்டியராகிய ஔவையாரின் திருவாக்கு. இதன் பொருள், பொருளைக் காப்பாற்றி நல்வாழ்வுற வேண்டுமென் பதே. அப்பொருள் யாதென்பதும், அதனை யெவ்வாறு போற்றி வாழ்தல் என்பதுமே' ஆராயற்பாலன. கைப்பொருள் செல்வ மெனவும், மெய்ப்பொருள் கல்வியெனவும் வழங்கப்பெறுகின்றன.

"கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமும் செல்வ மெனப்படும்."

என்றார் பெரியார். ஆகவே, இவ் விரு செல்வங்களும் உடைமைப் பொருளாகக் கொண்டு போற்றற் குரியவே. இவ் விருவகைச் செல்வத்தினுள்ளும் கல்வியே சிறந்ததென்னலாம். ஏனெனில், செல்வப் பொருளின் திறனை யுணர்தற்கும், அதனை யீட்டுதற்கும், போற்றுதற்கும் உரிய துறையிற் செலவிடுதற்கும் ஆன தன்மைகளைக் கல்வியினாற்றான் பெறுதல் கூடும். ஆனது பற்றியே, "கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள் கல்வி." எனப் பிறாண்டும் கூறினர். மேலும்,

"தெள்ளமுத மனையகல் விப்பொருள் படைத்திடிற்
றேசமெல் லாந்து திக்கும்
ஜெயத்தம்ப மானபுகழ் நிலைநிற்கும் இவையலாற்
செம்பொன்மிகு செல்வ மதுபோல்

*வெள்ளமதா கொளுமெனும் பயமில்லை கனலினல்*
*வெம்பவரு சலன மில்லை*
*வேந்தர்கள் பறித்திடக் கூடாது சோதரர்*
*விரும்பினும் பங்கு ருது*
*கள்ளராற் றிருடவு முடியாது வரவரக்*
*கனமலாற் குறைவு ருது*
*கருணைஞா னந்தழையு மாதலா லுனையிதய*
*கமலத்தில் வைப்ப தெளிதாம்."*

என அநுபவ ஞானிகள் கூறியிருத்தல் கொண்டும், கற்றோர்கள் சென்றவிடமெல்லாம் சிறப்புறுதல் கொண்டும், செல்வப் பொருளினும் கல்விப்பொருளே சிறந்ததென்பது தெளிவாம்.

இவ் விருபொருளையும் ஒருசேரப் பெற்றாலும், இவ்விரண்டிலொன்றைப் பெற்றாலும், பெற்றதைக்கொண்டு அதனாலாம் பிரயோசனத்தை அடைதல் வேண்டும். இன்றேல், பெற்றும் பெருதவரே யாவர். கல்வியும் செல்வமும் உடலோம்புதற்கென்று மாத்திரம் எண்ணி விடுதமல மடமையாகும். "பொருளுக் குடையவன் இறைவன்; அவ் விறைவன் நமது வினைக்கீடாக நம்மீது கருணையுடன் தந்தபொருள் இதுவாகும்; இதனை அவரது திருவுளத்துக்கு இசையும் வழியே செலவிடல் வேண்டும்; அப்படிச் செய்வதுதான் பொருளைப் பெற்றதின் பிரயோசனம்; பொருள் நம்மை விட்டுப் போகாமுன், நாம் பொருளை விட்டுப் போகாமுன், காலமும் பொருளும் உள்ளபோதே சாலச்சிறந்த வழிகளிற் செலவுசெய்து, ஞாலத்திற் பேரும்புகழும் பெற்று, மறுமைப் பயனுக்கும் ஆதாரமாக்கிக் கொள்ள வேண்டும்.

கல்விப்பொருளைப் படைத்ததின் பயனுக, கல்விப்பொருளானது செல்வப்பொருளைப்போல இவ்வுடலுள் ளளவு மாத்திரமன்றி எழுமையும் தொடர்ந்து மனதுக்கினிய வுணவளித்து இன்பூட்டுதலால், பொன்னினும் மணியினும் சிறந்ததாமெனப் போற்றி, "கற்றதனு லாய பயனென்கொல்?" என ஆய்ந்து, தூய அறிவுருவினனுகிய இறைவனது திருத்தாண்மலரைச் சிந்தித்துவந்தித்துப் போற்றி, அழிவிலாப் பொருளாய்—பழமறைக் கொழுந்தாய்—அமுதவாரிதியாய் விளங்குகின்ற இறைவனது திருவருளாகிய மங்கலப்பொருளையே மாண்புறப்பெற்றுவாழுதல் வேண்டும்.

மங்கலப் பொருளாவது சிவபரம்பொருளையே குறிக்கும். சந்தியை யுடைய சத்தன் எவனே அவனே சிவன். அவனை நேசித்தே மங்கலப் பொருள் பெற்று வாழுதல் கூடுமாதலின், யாவரும் சிவநேசர்களாக—சிவநேசப் பெருஞ் செல்வர்களாக—திருவருட் பெருஞ் செல்வர்களாக—ஒப்பாரு மிக்காரு மின்றி யுயர்வாழ்வுறச் சிவபரம்பொருளைப் போற்றுவோமாக!

மேலும், நமது சிவநேசனுக்கு ஆறுவதாண்டு நிரம்பி, இத்திங்கள் முதல் ஏழாவதாண்டு ஆரம்பமாகியிருப்பதால், 'சிவநேசன்' வாசகநேசர்கள், சைவமுந்தமிழுஞ் செவ்விதி னோங்கிச் செழிக்க, சிவநேசனையும்பொன்னென மணியெனப் பொருளெனப்போற்றித் திருவருள் நலம்பெற்றுப் பெருவாழ்வுற வேண்டுகிறோம்.

---

## நூல் வெளியீடு

(இருபா இருபஃது.)

இது, சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர் அருளிச் செய்தது. வெண்பா ஆசிரியப்பா ஆகிய இருவகைப் பாக்களாலும் அந்தாதித்தொடையாய் யாக்கப் பெற்ற இருபது பாக்களை யுடைமையால் இப்பெயர் பெற்றது. ஞானாசாரியரை நோக்கி மாணாக்கர் நிகழ்த்தும் வினாக்களின் தொகுதியாகிய இவ் வறிவு நூற்குத் திருநெல்வேலிப் பேட்டை, திருவாளர் ஆ. ஈச்சுரமூர்த்திப் பிள்ளையவர்கள் விளக்கமான பதவுரை வரைந்து, நமது சிவநேசனுடனிணைத்து இத் திங்கண்முதல்வெளியிட வுதவி யுள்ளார்கள். பதவுரையுடன் பொழிப்புரையும், கடாவிடையுள்ளுறுத்த அகலவுரையும் அமைந்திருத்தலின், இப்பதிப்பு இந் நூற்பொருளை யாவர்க்கும் எளிதி லுணர்த்தும் ஏற்றமுடைத்தா விலங்குகின்றது. இதன் உரைப்பகுதியின் பதிப்புரிமை உரையாசிரியருக்கே யுள்ளது. இதனை வெளியிட வுதவிய திரு. பிள்ளையவர்கட்கு மிகவும் நன்றிகூறுகின்றோம்.

## மதிப்புரை.

### திருவிளையாடற் சரண மஞ்சரி.

பள்ளத்தூர் திரு. அ. மு. ப. அ. மு. முருகப்ப செட்டியாரால் யாக்கப்பெற்றது. பசுபதியாகிய பரசிவப் பெருமான் பக்திச் சுவைநனி பரந்துவிளங்கும் திருவிளையாடற் புராணத்தைத் தமது இளமைப் பருவந்தொடங்கியே அன்புடன் பாராயணஞ் செய்து வரும் திரு. செட்டியாரவர்களின் மனமலர்ந்து இம் மஞ்சரிவடிவுற்றதாகக் காணப்பெறுகிறது. திருவிளையாடலை நித்திய பாராயணம்செய்வோர்க்கு இச் செஞ்சொன் மஞ்சரி சிறந்த துணையாமென்பது எமது கருத்து.

### திருஞானசம்பந்தர் பதிகம்.

கோநகர் திரு. சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியாராலியற்றப்பெற்ற பத்துப்பாக்களையுடைது. திருஞானசம்பந்த சுவாமிகளின் வரலாற்று முறையைத் தொகுத்துக் கூறிப் போற்றியுரைப்பது. பாக்கள் செம்பாகமாய்ச் சுவைநலமிக்கு மிளிர்கின்றன.

[சரணமஞ்சரி சம்பந்தர்பதிகங்களின் பிரதிகளை நமது பார்வைக்கனுப்பிய நண்பர்கட்கு மிகவும் நன்றிபாராட்டுகிறோம். ப—ர்.]

# திருக்கோயிலதிகாரிகள்

(திருக்செங்கோடு சிவஸ்ரீ அர்த்தநாரீஸ்வரக் குருக்கள் அவர்கள்.)

உலகத்தில் உயர்ந்த மனிதர்களெல்லாம் ஆத்திக மதத்தர்களே. தென்னந் தோப்பு என்பதனுள் வேறு சில மரங்களும் இருப்பதொப்ப, நாத்திகர்களும் இருப்பர். தெய்வ நம்பிக்கையுள்ளவர்களெல்லாரும் கடவுளை வணங்குதற்கு இடமும் காலமும் அமைத்துக் கோடல் பொதுவியல்பே. நமது சைவாகம முறைப்படி அமைத்துள்ள திருக்கோயில்களோ, சர்வ வியாபகமுள்ள இறைவரது கண்ட அகண்ட சொரூப லக்ஷணங்களைத் தூலவகையால் விளக்கிக் காட்டக்கூடியன. கோபுரங்கள்—கோபுர வாயில்கள்—விமானங்கள்—பிரகாரங்கள்—துவஜ ஸ்தம்பம்—பலிபீடம்—நந்தி—மகா மண்டபம்—அர்த்த மண்டபம்—அந்தராளம்—திரை—கர்ப்பக் கிரகம் (மூலட்டானம்) முதலானவைகளும், பிரதானமூர்த்தம்—பரிவார மூர்த்தங்கள் ஆதியவைகளும் தத்துவங்களையும்பேதாபேதங்களையும் காட்டுவனவாகும்.

கர்ஷண முதல் பிரதிட்டை வரையும், பிரதிட்டை முதல் உற்சவம் வரையும், உற்சவமுதற் பிராயசித்தம் வரையும் செய்யப்பெறும் காரியங்களும், ஜெபிக்கின்ற மந்திரார்த்தங்களும், சகள நிட்களத் தன்மை—ஜீவேசுவர வொடுக்க மாதியவைகளைக் குறிப்பனவாகும்.

மூர்த்திகளுக்குச் செய்யும் அபிடேக அருச்சனை ஆராதனை நைவேத்தியம் ஆதிய உபசாரங்களெல்லாம் தத்துவார்த்தங்களோடு கூடியனவே. இவைகளின் ஒவ்வொரு பாகங்களையும் விவரமாகப் பிறர்க்குச் சொல்பவர் வேதம், ஆகமம், இவைகளின் கிரியா பாத மாத்திரமல்ல ஞானபாதத்தையும் ஐயந்திரபறத் தெரிந்தவராயிருக்கவேண்டும்.

அலங்காரத்தோடுகூடிய இறைவனது திருவுருவத்தில் கண்களின் பார்வை பதிந்தும், சாம்பிராணி மட்டிப்பால் முதலிய புகை வாசனைகளை மோந்து மூக்குச் சொக்கியும், வேதமந்திரம் கீதவாத்தியாதிகளைக் கேட்டுச் செவிஇந்திரியம் சொர்ந்தும் போகின்றன. கொடியபாம்பும், பசுவாதி மிருகங்களும் ஸ்வரத்தோடுகூடிய கீதத்தால் செயல் மறந்து மனநிலையுற்றுளவென்றால், பகுத்தறிவுள்ள மக்கள் மன ஒடுக்கம் பொருந்தல் அதிசயமாமோ? இதனால், ஆலயங்களின் அமைப்பும் மூர்த்திகளும் பூஜை முதலியவைகளும் அவைகளுக்கு உரித்தாக அமைக்கப்பட்டுள்ள உபகரணங்களும் தத்வங்களும், ஜீவேசுர ஒடுக்கமும் மனோலயம் பெறும் மார்க்கமுமாக விளங்குகின்றன. கோயிலும், கோயிலுள் நடக்குங் காரியங்

களும், ஒவ்வொரு பொருள் விளக்கத்தையும் மன ஒடுக்கத்தையும் காட்டுவதும், மனநிலை பெறுமாறு கூட்டுவதுமாக இருக்கின்றன. ஆதலால், கோவில் அமைப்பும் செய்யும் கிரியையும் செய்யவேண்டிய காரணமும் விவரமாக விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டியது கோயில் அதிகாரிக்கு அவசியமானது. இவ்வளவு அருமை பெருமை வாய்ந்த கோயில்களின் ஆராதனை முதலியவைகளைச் சரிவர நடக்கும்படி மேல்விசாரணை செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளவர்களின் புண்ணியப் பேற்றை எவ்வளவென்று கணக்கிடலாகும்? அடையும் பலன் எவ்வளவு மேன்மையுள்ளது? இந்த அதிகாரத்தைக் கொள்பவர்கள், சைவராய், சைவசித்தாந்த சாஸ்திர நூல்களைக் கற்றவராய், பத்தியுள்ளவராய், விதிவிலக்குகள் தெரிந்து விவேகம் பொறுமையுடையவராய், சிவஸ்தல யாத்திரை தீர்த்தயாத்திரை செய்பவராய், ஜாதிசமய ஒழுக்கம் நற்குண நற்செய்கையுடன் நடுவு நிலைமையுள்ளவராய் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு நாளும் ஊழியம் புரிந்து ஊதியம் பெறும் ஏழைகளும் அதிலொரு தினையளவாவது கோயிலுக்குக் கொடுத்தே வருகின்றனர். இன்றியமையாத இவ் வாலயங்கட்கு முட்டுப்பாடு நேராமல் பண்டைய அரசர்களும் புண்ணிய சீலர்களும் பொன்னும் பூமியும் வழங்கியிருக்கின்றனர். கந்தாயத்தைக்கொண்டு நியமமாக பூஜை முதலியன நடந்து வரும்படி செய்வதுதான் கோயில் அதிகாரிகளின் கடமை. இவ் வதிகாரம் புத்திர சந்தானமாகவோ சிஷ்ய சந்தானமாகவோ பரம்பரையாகப் பார்த்து வரத்தக்கது ஒன்று; அவ்வவ்விடத்து ஜனங்களாலே தெரிந்தெடுக்கப்பட்டு நியமனம் பெறுவது மற்றொன்று; ஆக இரண்டு பிரிவாகும். ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படும் அதிகாரியாக பகீரதப் பிரயத்தனஞ் செய்பவர்களில், ஆலய கைங்கரியங்கள் சரியாக நடத்தவேண்டுமென்ற கருத்துள்ளவர்கள் நூற்றுக்கு ஒருவர் இருவர் இருப்பினு மிருப்பார்கள். மற்றவர்களெல்லாம் தங்களுக்குச் செல்வாக்கு வேண்டும், தேவடியார், மேளகாரர், சிப்பந்திகள் தமக்கு ஊழியர்களாகவேண்டும், தாம் செய்யும் பழிபாவங்களை மறைத்துப் புகழவேண்டும், சமயம் நேர்ந்தால் விரோதிகளைச் சதிசெய்ய அல்லது அவமதிக்கச்செய்ய—பொய்ச்சான்று புகல உதவவேண்டும் என்றெல்லாம் கெட்ட எண்ணமுடையவர்களாய், கௌரவ நிலை கருதி மேற்கொண்டவர்களும், கோயிற் பணத்தைச் சொந்த உபயோகப் படுத்திக்கொள்ளுபவர்களும் ஆவர். இவ் விருவகையினருமன்றி பெரியோர்கள் பெற்றுள்ள ஸ்வதந்திரத்தை விடக்கூடாது என்ற எண்ணத்துடன் கோயிலதிகாரத்தை ஏற்றுக்கொண்டவர்களும், திரவியத்தை அபேக்ஷியாவிடினும், பிறர் பொருள் கவர்வதைக் கண்டும் பரிகாரந் தேடாமலும், சீர்கேடாக நடப்பதைத் திருத்தி ஒழுங்குபெறப் பூஜை முதலியன செய்விக்காமலு மிருப்பர். எவ்

வாற்றானும் கோயிலதிகாரிகள் இம்மைப் பயனையே குறிக்காது செம்மை சிறக்க மாபூஜை செய்விப்பவரே சிறப்புடையாரென்பதும் அங்ஙனஞ் செய்யாதவர்களின் கதி யாதாம் என்பதும் சிந்திக்கற் பாலன.

இம்மைப் பயனைக் குறியாதே யிறைவன் றிருவா லயமதனுட்
செம்மை சிறக்க மாபூசை செய்விப் பவரே சிறப்புடையார்
இம்மைப் பயனைக் குறித்தியற்று மதிகா ரியர்நா யுடலெடுப்பர்
புன்மைப் புலைய னெனுமுடலும் பெருந்தி விடுவர் புகழினையே.

எனச்சிவதருமோத்தரம் கூறுதலால், திருக்கோயி லதிகாரிகளாவார் எவரும் நான்முறை தெரிந்து சீலத்தொழுகுதலே சாலச் சிறந்த தாகும்.

## திருக்கடைக் காப்பு.

சைவசமயாசாரிய சுவாமிக ளருளிச்செய்த திருமுறைகளில் திருஞானசம்பந்த மூர்த்தியும் சுந்தரமூர்த்தியும் திருக்கடைக்காப்பு அருளியவாறு, ஸ்ரீமத் அப்பர் சுவாமிகளும் ஸ்ரீமந் மணிவாசக சுவாமிகளும் திருக்கடைக்காப்புச் செய்யுள்க ளருளிச் செய்திருக்கின்றனரா? என்று சில சைவநண்பர்கள் வினவியுள்ளார்கள்.

ஸ்ரீமத் அப்பர் சுவாமிகளென்னும் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த நமச்சிவாயத் திருப்பதிகத்தி னீற்றுச் செய்யுளாகிய,

'மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயபத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே' எனவும்,

ஸ்ரீமந் மணிவாசக சுவாமிகள் தாமருளிச்செய்த திருவாசகத்தில் 'நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க!' என்ற முதலுடைய சிவபுராணத்தில்

'சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து'

எனவும் திருக்கடைக்காப்பும் பலனும்கூறியுள்ளார்கள். இது விஷயம் உயர்திரு சுவாமிநாத பண்டிதரவர்கள் இயற்றிய திருமுறைப்பெருமை என்னும் நூலில் பரக்கக் காணலாம். இவ்வாறே காரைக்காலம்மையார் அருளிச்செய்த திருப்பதிகங்களிலும், திருவிசைப்பா திருப்பல்லாண்டு முதலிய திருமுறைகளிலும் திருக்கடைக்காப் பருளிச்செய்திருத்தல் காண்க.

நல். கண்ணப்ப முதலியார்.

# தமிழ்க்கல்வி.

மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்தியகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள், "இந்து" பத்திரிகையில் எழுதிய தன் மொழிபெயர்ப்பு:—

தற்கால தேசீய நிலைமை மிகவும் வருத்தப்படத்தக்கதா யிருக்கிறது. வறுமையால் வருந்தும் மக்கட் டொகுதி மிகுதியாகக் காணப்படுகிறது. நாகரீகம் நட்பார்ந்தன்மை நல்லொழுக்கம் ஆதியவை ஓர்பாற் கூடுதலும் மற்றோர்பாற் குறைதலுமாக இருக்கின்றன. படித்தவர்களெல்லாம் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் வருந்துகிறார்கள். படிப்புக்கு ஏற்படும் செலவுகள் அதிகமா யிருக்கின்றன. கற்பதற்கு விருப்பமுள்ளவர்களுக்குங்கூட உயர்தரக் கல்லூரிகளில் இடங்கிடைப்ப தரிதாயிருக்கின்றது. இவ்விதக் குறைபாடுகளைத் தேச முன்னேற்றத்துக்காகச் சீர்திருத்தஞ் செய்ய எண்ணப்பட்டிருக்கிறது. இதை யநுசரித்துக் கீழ்ச்சாதி முதல் மேற்சாதி வரை இந்தச் சீர்திருத்த வேலையில் முன்னின்று வேண்டும் முயற்சிகள் செய்யவேண்டும்.

கல்வியானது எந்த வேலைக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமானது. கல்வியே எவ்வழியிலும் சீர்திருத்தத்தைக் கொடுக்கக்கூடியது. இவைகளை முன்னிட்டுக் கற்றறிந்தோர் தாய்மொழி யொன்றினால் மட்டுமே கல்வியின் நிறைவைப் புகட்ட முடியுமென்று அபிப்பிராயப்படுகின்றார்கள். நாளுக்குநாள் தமிழ்க் கல்வியானது, பிரவேசப் பரீக்ஷைகளின் மூலமாகவும், மதுரைத் தமிழ்ச் சங்கம், திருவாவடுதுறை திருப்பனந்தாள் முதலிய ஆதீனங்கள், இராமநாதபுரம் சமஸ்தானம், தனவைசியர்களால் நடத்தப்பெறும் கல்வி நிலையங்கள், செந்தமிழ்—கலைமகள்—சிவநேசன்—சுதேசமித்திரன் முதலான திங்கள் வெளியீடுகள் தினவெளியீடுகள் மூலமாகவும் முன்னேற்ற மடைந்துவருகின்ற தென்பது ஒப்புக்கொள்ளத்தக்கது. என்றாலும், கல்வி யறிவில்லாதவர்களுக்கு அவசியமான கல்வியைக் கொடுக்க இன்னும் போதுமான தமிழ் மத்தியதரக் கலாசாலைகள் ஏற்பட்டதாகத் தோன்றவில்லை.

இப்பொழுது சென்னைப் புத்தகாலய பிரசார சங்கத்தார் ஆதிசீக்கிரத்தில் தமிழன்பர் மகாநாடு ஒன்று கூட்டப்போவதாகவும், அம் மகாநாட்டில் தமிழ்க் கல்வியின் சில முக்கியமான விஷயங்களையும் இன்னும் உபயோகமான சில ஆக்க வேலைகளையும் மேற்கொண்டு உழைப்பதற்கானவைகள் தீர்மானிக்கப்பெறுமெனவும் தெரிகிறது.

தேசத்தின் தற்கால நிலைமையை யெண்ணி இது விஷயமாய் வேண்டும் முயற்சிக ளெடுத்து முன்னுக்குக் கொணர்வரும்படி எல்லோரும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சென்ற சில வருடங்களாக மேற்கண்ட சங்கத்தின் அங்கத்தினர்களால் செய்யப்பட்டுவந்த உதவியானது, அநேகருடைய முயற்சியைத் தவறாமற் கவருமென்பதில் ஐயமில்லை.

ஆகையால், தமிழன்பர் எல்லோரும் ஜீவதசையில் எவரெவர்கள் எங்கெந்த வேலையி லீடுபட்டிருந்தபோதிலும், அவர்களெல்லோரும் இப்பெருமுயற்சியி லொன்றுசேர்ந்து, தேச முன்னேற்றத்திற்கு வேண்டுவன செய்வார்களென நம்புகிறேன்.

# வாழ்நாள் வழியடைத்தல்.

மறைத் திருவாளர் வ. மு. இரத்திநேசுவரையரவர்கள்.

இவ்வுலகின்கண் மக்களாய்ப் பிறந்தார்க்கே நன்று தீது ஆயும் பண்புஉண்டு. அவருள்ளும் அறிவு திகழாதார் விலங்கின் வேறாகார். கலையறிவானன்றி உயரறிவு தலைப்படமாட்டாது. நமது நாடுகளில் செந்தமிழ்க் கல்வி நிலையங்கள் பல தோன்றவேண்டும். சமயவுண்மை மாந்தர்க்கு அவசியம் போதிக்கப்பெறவேண்டும். சமய பாடமின்றி, பிழையின்றிய பாட புஸ்தக போதனையின்றிக் கல்வி போதிக்கப் பெறுகின்றது. எல்லாம் போர்டுஸ்கூல். இத்தகைய எழுத்தறிவிக்கும் நிலையங்களாவது வந்ததே போதும்! 'சும்மா இருந்த அம்மையாருக்கு அரைப்பணத்திற் றாலி போதாதா?" என்கிறார்கள். சரிதான். எழுத்துக்களையாவது பிழையற இப் பள்ளியின் உபாத்தியாயர்களில், உபாத்தியாயனிகளில், பற்பலருக்கு எழுதத் தெரியாதே! என் செயலாம்? பாவம்! பாவம்!! கல்வியறிவால் நன்று ஆற்றின் வாழ்நாள் நன்கு கடந்து இன்புநெறி சாரலாம். தருமத்திற்குக் கேடு செய்வோர் மக்களாக மதிக்கப்பட நீதியுண்டா?

> வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
> வாழ்நாள் வழியடைக்குங் கல்.

தருமங்கள்பல. நாம் தருமஞ் செய்யாவிடினும் நம் சகோதரர்களால் நடாத்தப்பெறுகின்றவற்றிற்கு உறுதுணையாக நிற்பதே நலம். துணை புரியாதொழியினும் கெடுதி செய்யாவிட்டாலே போதும். நடைவழியை அடைவழியாக்கும் அறத்திற்கு மறம் என்றுதான் சொல்லலாம். வழியில் முள்ளைஇட்டால் வீடும் முள்ளால் நிறையுமன்றோ? சாலையை இட்ட சீரியோர் செயலைப் போற்றுவது புண்ணியமல்லவா? துக்கம்வந்தால் 'கிளைவழியில் முள்ளிட்டேனே' என்றுதான் பரிதபிக்க நேரிடும். ஆதலின், நல்லறம் புரிந்து நாடாரு மின்புகூட நாம் முன்னுவோமாக.

---

> நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்
> குளத்துக் கணியென்ப தாமரை பெண்மை
> நலத்துக் கணியென்ப நாணம் தனக்கணி
> தான்செல் லுலகத் தறம்.

(நான்மணிக்கடிகை.)

உ

# பத்தினிக் கடவுள்.

கோநகர் திருவாளர் சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார்.

முற்காலத்து நம்நாட்டு வாழ்ந்த பத்தினிப் பெண்கள் பலருள்ளும் சிறந்து விளங்கியவள் "கண்ணகி" என்னும் கவினிய மங்கையே யாவாள். அவள், கடவுளாகப் பூசிக்கப்படுகிறாளாதலின், "பத்தினிக்கடவுள்" எனப் பெயர் பெற்றனள்.

சோழநாட்டின் தலைநகரமாகத் திகழ்ந்ததும், காவிரிநதி கடலொடு கலக்கும் பெருமை வாய்ந்ததும், முற்காலத்துச் சிறந்தகடற்றுறைப் பட்டினமாக விளங்கியதும்; வைசியமரபினர் மாண்புடன் வாழ்ந்ததும், 'பூம்புகார்' என்னும் பெயர் வாய்ந்ததும் ஆகிய காவிரிப்பூம்பட்டினத்தில், இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர், இப்பர், கவிப்பர், பெருங்குடி என்ற வாணிகர் மூவருள், பெருங்குடிமரபில் உதித்த "மாசாத்துவான்" என்பான் வாழ்ந்து வந்தான். அவனுக்கு, "கோவலன்" என்பானோர் புத்திரன் இருந்தான். அதுகாலை அங்கு வசித்து வந்த வணிகர் மரபினனாகிய "மாநாய்கன்" என்பான், தன் அருந்தவத்தாற் பெற்ற "கண்ணகி" என்னும் மகளுக்கு விவாகத்திற்குரிய பருவம் வரவே, கண்ணகிக்கிசைந்த கணவன் கோவலனே எனத்துணிந்து, கோவலனுக்குக் கண்ணகியைமணஞ்செய்வித்தனன். இல்லறத்திற் கின்றியமையாத அறவோர்க்களித்தல், அந்தணரோம்பல், துறவோர்க் கெதிர்தல், விருந்தெதிர்கோடல் முதலிய கைக்கொண்டு, கோவலனும் கண்ணகிபால் அளவில்லாத அன்புடையோனாய்,

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறற் பாவா! யாருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!
மலையிடைப் பிறவா மணியே யென்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ!
யாழிடைப் பிறவா இசையே யென்கோ!
தாழிருங் கூந்தற் றையா! நின்னையென்
றுலவாக் கட்டுரை பலபா ராட்டி"

இல்லறவாழ்க்கை இனிது நடாத்தி வந்தனன்.

அக் காலத்தில் அப் பட்டினத்தில் வாழ்ந்தவளும்,

"மானிளம் பிணையோ தெய்வ வளரிள முகையோ வாசத்
தேனிளம் பதமோ வேலைத் திரையிளம் பவள வல்லிக்
கானிளங் கொடியோ திங்கட் கதிரிளங் கொழுந்தோ காமன்
றனிளம் பருவங் கற்குந் தனியிளந் தனுவோ வென்ன"

ஐயுறத் தக்கவளும், பாத்தையர் குலத்தி லுதித்தவளுமாகிய "மாதவி" என்னும் மங்கை, ஆடல், பாடல் முதலியவைகளில் தேர்ச்சி யுள்ளவளா யிருந்

தமையறிந்து, அவள்பால் மோகமுற்றுத் தன் கற்பின்மேம்படு காதலியை மறந்து, தன்னிடத்துள்ள பொருள் முழுமையும் மாதவிக்கே கொடுத்து, அவளுடன் வாழ்ந்து வந்தான் கோவலன். கண்ணகி அதனால் மிகவருத்த முற்றாளாயினும், அதனை வெளிக்காட்டாது இல்லறத்திருந்து கற்பு நெறி வழுவாது வாழ்ந்து வந்தனள். இது நிற்க:

அப் பட்டினத்தில் ஆண்டுதோறும் சோழ அரசர்களால் நடத்தப் பெறும் இந்திரவிழா ஆரம்பமாயிற்று. இவ் விந்திரவிழாவின் வரலாறு,

"உலகர் இரியா வோங்குயர் விழுச்சீர்ப்
பலர்புகழ் மூதூர்ப் பண்புமேம் படீஇய
ஓங்குயர் மலயத் தருந்தவ னுரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்
விண்ணவர் தலைவனை வணங்கிமுன் னின்று
மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுள்
மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த
நாலேழ் நாளினும் நன்கினி துறைகென
அமரர் தலைவ னாங்கது நேர்ந்தது"

என மணிமேகலை கூறுகின்றது. முற்காலத்துப் புகார்நகரத்தை யாண்ட 'தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்' என்னுஞ் சோழனிடத்து 'திண்டிறற் புலமைக் குண்டிகைக் குறுமுனி' சென்று, நின்நாட்டை வளப் படுத்துவாயாக' எனச் சொல்லினர். அதுகேட்ட வளவன், நாடு வளம்பட வேண்டுமேல் மழையின் உதவி வேண்டத்தக்கது. ஆதலின், மழைக்குத் தலைவனாகிய இந்திரனுக்கு விழவெடுப்போமானால் நாடுவளம்பெறும் என்ற கருத்துடன் விண்ணவர் உலகம் நண்ணி இந்திரனிடத்து 'ஐயனே! நினக்கு எந்நாட்டில்இருபத்தெட்டுநாட்கள் விழவெடுக்க நிச்சயித்துள்ளேன். அதற்கு ஆங்கெழுந்தருளி யிருக்கவேண்டும். என்று வேண்டிக்கொள்ள இந்திரனும் இசைந்தனன். அதுமுதல் ஆண்டுதோறும் இந்திரவிழா எடுத் தலைச் சோழ மரபினர் கைக்கொண்டன ரென்பது தெரிகின்றது.

இனி, இந்திரவிழா நடைபெறப்போதலைமுரசறைவோன் யானைமேல் முரசையேற்றி முதலில் 'பட்டினம் யாழ்க' எனவாழ்த்தி, 'வான மும்மாரி பொழிக, மன்னவன் கோனிலை திரியாக் கோலோனாகுக' எனக்கூறி விழா நடைபெறப் போதலை அறிவித்தனன். அதுகேட்ட நகரமாந்தர்கள் மிகக் களிப்படைந்தவர்களாய், 'பொன்னகர் வறிதாப் போதுவ ரென்பது, தொன்னிலை யுணர்ந்தோர் துணிபொரு ளாதலின், 'வீதிகள் தோறும் தோரணங்கள் கட்டி, காய்க்குலைக் கமுகும், வாழையும் வஞ்சியும், பூக் கொடி வல்லியும் கரும்பும் நட்டு, நிறைகுடமும், பொற்பாலிகைகளும், பாவைவிளக்கும் வைத்தனர். வீதிகள்தோறும் பழயமணலைமாற்றிப் புது மணல்பரப்பினர். ஆலயங்கள்தோறும் விசேடமாகப் பூசைநடத்தினர். இவ்வாறு நகரமாந்தர் அனைவரும் மகிழ்ச்சிக்கடலில் திளைக்க, விண்ணவர் தலைவற்கு ஆயிரத்தெட்டுப் பொற்குடங்களில் காவிரிநீர்கொண்டு மஞ்சன மாட்டினர். இவ்வாறு விழா நடத்தி இருபத்தெட்டுநாட்கள் சென்றபின், நகரமாந்தரனைவரும் கடலாடி மருங்கமைக்கப்பெற்ற மாடங்களில் மகிழ்ந் திருந்தனர்.

அங்கு, மாதவியுடன்கடலாடி அவளோடு அளவளாவிக்கொண்டிருந்த கோவலன், அவள்கையிலிருந்த வீணையைவாங்கிக் காவேரியைச் சிறப்பித்து,

"திங்கண் மாலே வெண்குடையான் சென்னி செங்கோ லதுவோச்சி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி! காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி! காவேரி.

பொழிதரு நறுமலரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணையிள வனமுலையே
முழுமதி புரைமுகமே முருபுரு வில்லிணையே
எழுதரு மின்னிடையே யெனையிடர் செய்தவையே.

புன்னை நீழற் புலவுத் திரைவாய்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
கொன்னே வெய்ய கூற்றம் கூற்றம்."

என்பன வாதிய பாடல்களைப் பாடினான். அதுகேட்ட மாதவி, "இது காறும் என்பால் பெரிதும் அன்புடையவன்போல் நடித்த இவன் றன்மை இன்றன்றோ புலனாயிற்று" என்று நினைத்துக் கோவலன் வாசித்த உருக்கள், களவில் தலைமகன் கூற்றாதலால், அவன் தன்மேல் அன்பில னென உட்கொண்டு புலந்து, அது தோன்றாமல் மனமகிழ்ந்தாள்போலத் தன்பக்கல் வேறு குறிப்பிலளாயினும் வேறு குறிப்புடையாள்போல அவனுக்குத் தோன்ற வீணையை வாங்கி,

"பூவார் சோலை மயிலாலப் புரிந்து குயில்க ளிசைபாடக்
காமர் மாலை யருகசைய நடந்தாய் வாழி! காவேரி
காமர் மாலை யருகசைய நடந்த வெல்லா நின்கணவன்
நாம வேலின் றிறங்கண்டே யறிந்தேன் வாழி! காவேரி.

சேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டேர்
ஊர்ந்த வழிசிதைய வூர்கின்ற வோதமே
பூந்தண் பொழிலே புணர்ந்தாடு மன்னமே
யீர்ந்தண் டுறையே யிதுதகா தென்னீரே.

கைதை வேலிக் கழிவாய் வந்தெம்
பொய்த லொழித்துப் போனா ரொருவர்
பொய்த லொழித்துப் போனா ரவர்நம்
மையன் மனம்விட் டகல்வா ரல்லர்"

என்பன வாதிய பாடல்களைப் பாடினாள். அதுகேட்ட கோவலன், மிக வருத்தமுற்றுக் கானல்வரி யான்பாடத் தானொன்றின்மேல் மனம் வைத்து மாயப்பொய் பலகூட்டு மாயத்தாற் பாடினாளென நினைத்து, ஊழ்வினை துரப்ப அவளைவிட்டுநீங்கிக் கண்ணகிபாற் சென்றான். மாதவியும் தன் இல்லஞ் சென்று கோவலனின் பிரிவுக் காற்றாது வருந்தி, தன் தோழியாகிய "வசந்தமாலை"யை யழைத்து, இப்பொழுதே கோவலனை

இங்கே கொணர்வாயாக!" எனக் கோவலனிடத் தனுப்பினள்.. வசந்த மாலை கோவலனிடத்துச் சென்று மாதவியின் பிரிவாற்றாமைத் துன்பத்தை அறிவிக்க, நாடகக் கணிகையாதலால் வஞ்சமன முடையவளாயும், உள்ளுற அன்பில்லாதவளாயு மிருக்கிறாளென மறுக்க, வசந்தமாலை மாதவி பாற் சென்று கோவலன் உள்ளக்கிடக்கையை உரைத்தனள். மாதவி, ஒருவாறு தேறி இன்று மாலை வராவிட்டாலும் நாளைக் காலையாவது வருவானென்ற எண்ணத்துடன்,

"மலரமளித் துயிலாற்றாள் வருந்தென்றல் மருங்காற்றாள் மங்குல் வானி
னிலவுமிழுந் தழலாற்றா ணிறையாற்றும் பொறையாற்றா நீர்மை யாகிக்
கலவமயி லெனவெழுந்துங் கருங்குழலின் பரமாற்றாக் கைய ளாகிப்"

பூப்பாயலில் வதிந்தனள். இஃதிவ்வாறாக:

கண்ணகி, வீட்டில் தன் தோழியாகிய தேவந்தியினிடத்தில்,

"கடுக்குவன் னெஞ்சங் கனவினா லென்கை
பிடித்தனன் போயோர் பெரும்பதியுட் பட்டேம்
பட்ட பதியிற் படாத தொருவார்த்தை
யிட்டன ரூரா ரிடுதேளிட் டென்றன்மேல்
கோவலற் குற்றதோர் தீங்கென் றதுகேட்டுக்
காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன் காவலனோ
டூர்க்குற்ற தீங்குமொன் றுண்டா லுரையாடேன்"

என்று தனகுற்ற தீக்கனவைக் கூறிக்கொண்டும், அதற்கு அவள் சொல்லிய சமாதானங்களைக் கேட்டுக்கொண்டு மிருந்தனள். அதுகாலை கோவலன் வருகிறானென்று குற்றேவல் செய்யும் மங்கை கூற, கோவலனும் கண்ணகியின் சயனஅறை சென்று, அவள் சரீர வாட்டத்தையும் மனவருத்தத்தையு மறிந்து, "பொய்யை மெய்யாகக் காட்டி ஒழுகும் பரத்தையை மருவி வாழ்ந்ததால், முன்னோராற் கிடைத்த செல்வமெல்லாம் நீங்க வறுமையை யடைந்தேன். அதனால் மிக்க நாணுறுகின்றேன்." எனக் கூறினன். கண்ணகி, நலங்கேழ்முறுவல் நகைமுகங்காட்டி, மாதவிக்குக் கொடுக்கப் பொருளில்லை யென்ற வருத்தத்தால் இங்ஙனம் கூறினானோ என நினைத்து, "அன்பரே! என்னிடத்தி லிரண்டு சிலம்புகள் உள்ளன. அவற்றைக் கொண்டருளுக" என்றனள். கோவலன், "பெண்ணே! இச்சிலம்பைக்கொண்டு மதுரைநகர் சென்று விற்று வாணிபஞ் செய்ய எண்ணியுள்ளேன். ஆதலின், நீ இப்பொழுதே என்னுடன் புறப்படுவாயாக" என்றனன். பின்பு, கண்ணகியையும் அழைத்துக்கொண்டு மதுரையை நோக்கிப் புறப்பட்டான்.

புறப்பட்ட கோவலன் காவேரியின் வடகரை வழியாக மேற்கே சென்று, அங்கோர் பூஞ்சோலையில் தவஞ்செய்துகொண்டிருந்த ஆருகத சமயத்து முதியோளாகிய "கவுந்தி"யைக் கண்டு, அவளும் உடன் வருவேனென்று சொல்ல, அழைத்துக்கொண்டு காவேரியின் தென் கரையை யடைந்து ஓர் சோலையில் தங்கியிருந்தான். அதுபோழ்து கோவலனையும் கண்ணகியையும் அவமதித்துப் பேசிய ஓர் பரத்தையையும் ஓர் தூர்த்தனையும், நரிவடிவமாகும்படி கவுந்தி சபித்தனள். பின் மூவரும் உறையூரை அடைந்தனர்.

[தொடரும்.]

உ

# சிவத்தின் இயல்பு.

---

சுதுமலை அம்மன்கோயில்
சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் அவர்கள்.

சிவத்தி னியல்பைத் தெளிந்தினு மாயி
லுவப்புறு ஞானமு முயரின் பமுமாம்
ஞானமென் பதனை நாடிடிற் சத்து
மூனமில் சித்துமா முறுமீ ரியல்பாய்ச்
சத்தது காரிய காரணப் படாது
நித்தமோர் படித்தாய் நிற்பதாஞ், சித்து
உணர்த்த உணர்தலை யொழிந்தது தானே
தணிப்பில் சுயம்பிர காசமாய் நிற்பது
இவ்விரு தன்மையு மெம்மிறை காட்டு
மெவ்வமில் விசேட மெழிலா ரியல்பாம்
அதனால் ஞானமென் றறைந்திடு நூலே
தத்துவா னந்த முறையிய லுரைக்கின்
சர்வஞ் ஞத்துவம், சாருறு திருத்தி
நிராம யான்மா, நிகழ்சுவ தந்திரம்
அநாதி போதம், அலுத்த சத்தியோ
டநந்த சத்தி, விசுத்த தேகமென்
றெண்குண முடைமையா யியம்புவர் மேலோர்
எண்படு சிவத்தி னியல்பல குணங்கள்
மன்னுயிர் மாட்டுள மாகரு ணைக்குணம்
தண்ணளி யார்பரா சத்தியாய் வைகும்
அக்குணம் வசப்பட் டாங்குறு சிவத்தை
தொக்கவந் நிலையிற் சொல்லுவர் பதியாய்
அப்பதி சமுகத் தமர்வுறு முலகம்
ஒப்பிலந் தொழிலா யொழுகுமவ் வைந்தொழில்
நிகழ்தற் கேதுவாய் நின்றவப் பதியின்
புகழ்பெறு சத்தியைப் பொருவிலா வாதிமற்
றிரோதா யியதாய்ச் செப்பிடும் நூலே
பதியுமவ் வாதி பண்புறு சத்தியும்
கதிரவ னும்மதன் கதிரும்போ னிற்கும்
சூரியன் முன்னரே துய்யவக் கிரணம்
சார்விசே டத்தாற் றாமரை யரும்பலும்
அலர்தலும் புலர்தலு மாஞ்செயற் பாடுகள்
பலவுள நிகழும் பான்மையைப் போல
பதியது சமுகம் பாரது தோன்றி

முதிருற வழியும் முறையினை யடையும்
சீரிய வுவமையிற் செய்யதா மரையின்
சாருறு விகாரமுந் தானடை யாமை
ஓருறு மனநி லுய்த்துண ரப்படும்
இன்னுமிவ் வுவமையி வினனுடை கிரணம்
பன்னுறு விகாரப் படுதலின் றாகும்
ஆங்கது போல ஆதியாஞ் சத்தியும்
பாங்கமர் விகாரம் படைத்தலின் றாகும்.

---

"சிவநேசன்" ஏழாவதாண்டு

# வாழ்த்தும் மதிப்புரையும்.

யாழ்ப்பாணம் வண்கிழக்கு திருவாளர் சி. மு. சின்னத்தம்பிப் பிள்ளை யவர்கள்:—

வாழ்க! வாழ்க!! சிவநேசன் வாழ்க!!!

புகழுறத் தோன்றிய புண்ணியத் தலைவ!

சைவத் தமிழுலகிற்குத் தாங்களும் தங்கள் மரபினர்களும் செய்து வருகின்ற பயன்றாக்கா வுதவி பலவற்றுள்ளும் தலையாய தங்கள் சிவப்பணிக்கு இணை யாவுள?

வேதமூர்த்தி மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயர் முதலாய பெரும் போறிஞர் பலர் வாழ்த்திப் போற்றிய சிவநேசனுக்கு எனது வாழ்த்தும் உரிமை யுடைத்தாகுக.

"........இப்பார்
செய்யுறவன்மால்உமைபூசைகொள்தேவதேவன்
வையத்தவர்செய்வழிபாடும்மகிழுமன்றே."
என்றபடி.

* * * *

கொ. இலக்குமிபுரம் சிவஸ்ரீ K. P. சுப்பிரமணிய சிவாசாரியாரவர்கள்:—

"சிவநேசன்" பத்திரிகை கண்டு பேரானந்தம் உறுகின்றேன். அதனுட் காணும் சாஸ்திரசார அருவி எனதறிவிற் பாய்ந்து பயன் விளைவிக்கின்றது. தீயோர், வேதசாஸ்திர முதலான நிந்தைகளையே மேற்கொண்டு காட்டுத் தீயைப் போலக் கனன்று பரவுகின்ற இத்

தருணத்தில், தங்கள் பத்திரிகையில் வரும் சாஸ்திரமழைப் பிரவாகமானது, அக் கொடிய தீயினை யணைத்து, நன்மக்க ளறிவிற் பாய்ந்து செழிப்புறச் செய்யுமென்பதில் ஐயமில்லை. இத்தகைய சிவபுண்ணியத்திற்கு எய்தப்பெறுங் கைம்மாறு இன்பவீடே. அதனை யுதவுவான் இறைவனே யாதலின், அவன் றிருவடியைப் போற்றுவாம்.

* * * *

ஆவினிப்பட்டி, விவேகானந்தர் கல்விக் கழக ஆசிரியர் யாழ்ப்பாணம் தமிழ்ப் பண்டிதர், திரு. வ. மு. இரத்திநேசுவரையர் அவர்கள்:—

1. செம்மைச் "சிவநேசன்" தெய்வத் திருவருளை
இம்மைப் பிறவிதனி லெய்தவே—நம்மைத்
தவநெறியிற் சார்விக்கத் தக்கமதி வந்து
சிவனருளால் வாழ்க! சிறந்து.

2. பார்வளர் சைவத் திறமிக மேதினி பண்டுசெய்த
நீர்வளர் பூசா பலத்திறன் மிக்கு நிறைந்தவன்றே
சீர்வளர் பேர்ராம சாமிப் பெருந்தகை தேர்ந்தளிக்க
ஏர்வளர் நற்சிவ நேசனெம் முன்ன ரிலகியதே.

* * * *

கோநகர் திரு. சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார்:—

புவநேசன் கண்ணுதலோன் புங்கவர்கள் தொழுமீசன்
போற்று மன்பர்
பவநேசங் கடிந்தருள்செய் பண்ணவன்சீ ரடியர்செயும்
பழுதி லாத
தவநேசன் இளமதிசேர் சடையினன் தாமரைத்தா
டலைமேற் கொண்டு
சிவநேசன் பத்திரிகை நீடூழி வாழ்கவென
சிந்திப் பாமே.

* * * *

தென்னாற்காடு ஜில்லா எஜிகேஷன் கௌன்சில் மெம்பரும், திருக் கோவலூர் தாலுக்காபோர்டு மெம்பரும் ஆகிய கண்டாச்சிபுரம் திரு. வை. ச. இராமலிங்க முதலியாரவர்கள்:—

1. சீர்வளர்ந் தோங்கு மிந்திய நாட்டிற்
றென்றிசை பயின்றமா தவத்தால்
கார்வளர்ந் தோங்கு மணிமிடற் றண்ணல்
கண்டிநற் சைவமு நீறும்

பேர்வளர்ந் தோங்கித் தமிழ்மணங் கமழப்
பெரிதுநல் லறிஞர்க ளுவப்ப
ஏர்வளர் பலவான் குடியினிற் றோன்று
மெழில்சிவ நேசன்வா ழியவே!

2. வாழியிவ் வேழா மாண்டினு முன்போல்
மதிதொறுஞ் சோமநாட் டோன்றி
வாழிநல் லறிஞர் கட்டுரை வியாசம்
வாழ்த்தொடு செய்திக டாங்கி
வாழியிங் கிதனை வளர்க்குமா சிரியர்
மன்னுறு மிராமசா மிப்பேர்
வாழிமெய் விடய தானஞ்செய் பவர்கள்
வாழிசந் தாதரும் பெரியோர்.

3. பெரியர்கள் கூறு மாசிநன் மொழியால்
பிறழ்ந்திடா தொளிர்கதி ரேபோல்
விரிவுடன் ஞானச் சுட்டொளி பரப்பி
வியனுல கெங்கணு முலவி
கரியுரி போர்த்த கண்ணுத லருளால்
கவின்பல வான்குடி யென்னும்
புரியினிற் றோன்று நற்சிவ நேசன்
புகழுடன் வாழ்கபல் லாண்டே.

* * * *

வேலூர், மண்டி, திருவாளர் லோ. கு. நடராஜச் செட்டியாரவர்கள்:—

சைவசித்தாந்த ஞான சாத்திரங்களை யாராயத் தீவிரமாக முயலும் எனது விருப்பத்துக்கு இடையூறுகப் பாபாத்மாக்களின் இயக்கம் பரவுதல் கண்டு கவலையுறும்போது சிவஞான போனகமாகிய திருவமுதளித்து என்னைத் தேற்றும் சிவநேசனை மனதாரப் போற்றுகின்றேன்.

* * * *

கரிவலம்வந்த நல்லூர், ஆனந்தகான சபையார்:—

சைவசமய வுண்மைகளையும், தமிழ்மொழி யாராய்ச்சிகளையும் சிறப்பாகக் கொண்டு, நல்ல காகிதத்தில் சுத்தமான எழுத்துக்களால் அச்சியற்றிப் புத்தகவடிவந்தாங்கி, ஸநாதன தருமத்தை நிலைநிறுத்தி வரும் சிவநேசன், தில்லைவாணர் திருவருளால் வெற்றி மிகுத்துப் பல்லாண்டுவாழப் பிரார்த்திக்கிறோம்.

———